[1993 மார்ச் 23

3. வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்தவுடன் ஒரு பிரச்சினையை எழுப்பும் நடைமுறை—தலைவரின் தீர்ப்பு.

திரு. இளம்வழுதி : சார், நான் ஒன்றை எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி எனக்கு எழுதிக் கொடுங்கள். நான் அடுத்த பிரச்சினைக்குப் போய் விட்டேன்; எழுதிக் கொடுங்கள்; நான் அது பற்றிப் பிறகு சொல்கிறேன்.

திரு. இளம்வழுதி : முக்கியமான பிரச்சினை, உங்களோடு ஒத்த கருத்துள்ள பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை இல்லை, என்னோடு ஒத்த கருத்துள்ள பிரச்சினை என்ற காரணத்தால் எந்த நேரத்திலேயும் எழுப்பக் கூடாது. உட்காருங்கள் (குறுக்கீடு) அடுத்த பிரச்சினையை எடுக்க இருக்கிறேன்.

திரு. இளம்வழுதி : இந்தி படித்தால் தான் ஆல் இந்தியா ரேடியாவிலே வேலை என்ற நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அது பற்றி எழுதிக் கொடுங்கள். அதை உரிய முறையில் எழுதிக் கொடுத்தால் தான் அதை எடுத்துக் கொள்வது பற்றி உங்களுக்கு அனுமதி அளிக்க முடியும். உட்காருங்கள்.

(ஆ) திருநெல்வேலி அருகே கள்ளச்சாராய லாரியை மடக்க முயன்ற காவல்துறை அதிகாரி இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநெல்வேலி அருகே கள்ளச் சாராய லாரியை மடக்க முயன்ற காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் இறந்தது பற்றிய ஒரு பிரச்சினை. இதைப் பேரவையில் எழுப்புவதற்கு அனுமதி கோரி திரு. தே. குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திருமதி ரமணி நல்லதம்பி, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. தாமரைக்கனி ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை இன்று அனுமதிக்கிறேன் என்று ஏற்கனவே நான் சொல்லி இருந்தேன். இன்று அதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர அனுமதிக்கிறேன். அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமசுப்பு.

1993 மார்ச் 23]

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் 18—3—1993 ஆம் நாள் அன்று (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன், திரு. செல்வராஜ் ஆகியோரும் கொடுத்திருக்கிறார்கள். சில நேரங்களில் ஒருவருடைய லெட்டர் பேடிலேயே எல்லோரும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விடுகிறீர்கள், (குறுக்கீடு) அப்படிக் கொடுப்பதாக இருந்தால் கடிதத்தின் மேல் பகுதியிலேயும் நீங்கள் உங்களுடைய பெயர்களை எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். ஆகவே தான் இந்தப் பிரச்சினை எழுகிறது. அதை யார், யார் கொடுத்திருக்கிறீர்களோ, கொடுத்தவர்களுடைய பெயர்கள் எல்லாம் சேர்த்துக் கொள்ளப்படும். திரு. ராமசுப்பு.

முற்பகல் 11–25

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : கடந்த வாரம் 18—3—1993 ஆம் நாளன்று திருநெல்வேலியில் காவல் துறை துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வந்த, சிறந்த அதிகாரி என்று அந்தப் பகுதியிலே மக்களால் போற்றப்பட்ட திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் அங்கே இரவு காவலுக்காக வெடிகுண்டு பிரச்சினைகள், பல்வேறு பஸ் எரிப்பு பிரச்சினைகள், இது போன்ற பிரச்சினைகள் இருக்கின்ற சமயத்திலே, அவர் கண்காணிப்பிற்காக இரவிலே ரோந்து சென்று கொண்டிருக்கும் போது பஞ்சு ஏற்றி வந்த ஒரு லாரியை அவர் மடக்கி அதில் என்ன இருக்கிறது என்று சோதனை போட்டபோது, அந்த லாரியில் 4 பெரிய கேன்களில் கள்ளச் சாராயம் இருந்ததைக் கண்டு பிடித்து அவரோடு சென்ற 5 காவலர் அந்த லாரியைச் சென்று மடக்கி அதில் ஏறி பிடிக்கச் சென்ற போது, அந்த லாரியினுடைய டிரைவர் திடீரென்று மிக சூசகமாக லாரியை எடுத்துச் சென்றதால் அவர்களுக்குப் பின்னால் இவர்கள் ஜீப்பிலே விரட்டிச் சென்று, அந்த சமூக விரோதிகளைப் பிடிக்கச் செல்லும்போது அந்த லாரி டிரைவர் திடீரென்று பிரேக்கைப் போட்டு,—அந்த லாரிக்குப் பின்னால் அந்த ஜீப் வருவதை அறிந்த பின்னர்,— அந்த அதிகாரியை எப்படியாவது கொலை செய்ய வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டு அந்த பிரேக்கை போட்டதால் ஜீப் அதில் முட்டி அந்த அதிகாரி அந்த இடத்திலேயே மிகக் கொடுமையாக சாகடிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சம்பவம் அந்தப் பகுதியிலே மிகவும் அச்சத்தையும், பதட்டத்தையும் உருவாக்கியிருக்கிறது. அவர் மிகச் சிறந்த காவல் துறை அதிகாரி மட்டுமல்ல. நான் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு காலத்திலே கிராமங்களிலுள்ள வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் சாராய வியாபாரம் பார்ப்பதுண்டு. ஆனால் இன்றைக்கு நிலைமையைப் பாருங்கள். லாரியிலே கடத்தக் கூடிய அளவிலே இருக்கிறது. அது போல இன்னும் சில கிராமங்களில் தாதாக்கள் போல சிலர் காவல் துறையையே தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரக் கூடிய அளவிலே மிகக் கொடுமையாக செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர வேண்டியது அவசியம். ஏனென்றால் இன்றைக்கு இந்த கொடுமையான சம்பவம் என்பது அவர்களை மிகவும் வன்மையாக கண்டிக்க வேண்டிய ஒரு விஷயமாகும். அந்த 4 பேர்கள் அந்த லாரியிலிருந்து தப்பிச் சென்றிருக்கிறார்கள். அவர்களைப் பிடித்து கடுமையாக தண்டிக்க வேண்டியதும் அரசினுடைய கடமை ஆகும். இது போன்ற சம்பவங்கள் பல இடங்களிலே நடந்து கொண்டிருக்கிறது. இதை நீங்கள் எளிதாக எடுத்துக் கொள்ளாமல்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது பற்றியது. இதில் நீங்கள் விரிவான விளக்கம் அளித்துக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த சம்பவத்தைப் பற்றி மட்டும் நீங்கள் பேசுங்கள். இந்த சம்பவத்தைப் பற்றித்தான் நீங்கள் கவன ஈர்ப்பு கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்தச் சம்பவத்தைப் பற்றி நீங்கள் பேசி முடியுங்கள்.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இந்தச் சம்பவத்தை வைத்து இன்னும் பல இடங்களிலே இப்படி நடைபெறுகின்றன என்பதைத்தான் நான் உங்களுக்குச் சுட்டிக் காட்டுகிறேன். இது போன்ற சமூக விரோதிகள் சட்டத்தை கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்ல வருகிறேன். பாலசுப்பிரமணியம் அவர்கள் எனக்கு அருமையான நண்பர் மட்டுமல்ல. என்னிடம் அழகாகப் பழகக் கூடியவர். அந்தப் பகுதியிலே ஒரு திறமையான நேர்மையான அதிகாரியாக பணியாற்றி வந்தவர். ஆகையால் இது போன்ற சமூக விரோதிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சிறந்த அதிகாரி மட்டுமல்ல, தஞ்சாவூரைச் சேர்ந்தவர். அந்தப் பகுதியிலே பலர் அறிந்த ஒரு நல்ல அதிகாரி. அவருடைய குடும்பம் இன்றைக்கு அவரை இழந்து தவித்துக் கொண்டிருக்கிறது. மனைவி மக்கள் எல்லாம் துன்பப்படும் அந்தக் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை செலுத்த வேண்டியது நம்முடைய கடமையாகும். அந்தக் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து ஒரு நல நிதியை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக அரசு நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

1993 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11.30

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாய் மற்றும் கல்கத்தா நகரங்களில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் காவல் துறையினர் கண்காணிப்புப் பணி, இரவு நேர ரோந்துப் பணி மற்றும் வாகனங்கள் பரிசோதனைப் பணி ஆகியவற்றைத் தீவிரப் படுத்தினர். 9—3—1993 அன்று திரு. ஜான் பாண்டியன் திண்டுக் கல்—அண்ணா மாவட்டம் செம்பட்டியில் கைது செய்யப்பட்டதை யடுத்து அவரது ஆதரவாளர்கள் 17—3—1993 அன்று திருநெல் வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் பேருந்துகள் மீது கல்லெறி தல், பேருந்தைத் தீயிட்டுக் கொளுத்துதல் போன்ற பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டனர். எனவே, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும் சமூக விரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்தவும் இரவு நேர ரோந்துப் பணி மற்றும் சுற்றுக் காவல் பணி மேலும் தீவிரப்படுத்தப்பட்டன. அதன்படி திருநெல்வேலி நகர துணைக் கண்காணிப்பாளர் திரு. பாலசுப்பிரமணியன், நான்கு ஆயுதப் படைக் காவலர்களுடன் அரசு ஜீப் எண். டி.ஏ.டி. 3738-ல் 17—3—1993 அன்று இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டார். திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள், இரவு நேர ரோந்துப் பணியில் இருந்த போது 18—3—1993 அன்று அதிகாலை 2 மணி அளவில் தேசிய நெடுஞ் சாலையில் கங்கைகொண்டான்-தாழையூத்துக்கு இடையில் வடக்கி லிருந்து தெற்குத் திசை நோக்கி வந்து கொண்டிருந்த லாரி ஒன்றை வழிமறித்தார். லாரி ஓட்டுநர் லாரியை நிறுத்திய போது லாரியின் கேபினில் ஓட்டுநர் மற்றும் கிளீனர் உட்பட 4 நபர்கள் இருப்பதையும், மேலும் 4 பிளாஸ்டிக் கேன்கள் இருப் பதையும் கண்டு பிடித்தார். அந்த பிளாஸ்டிக் கேன்களைப் பற்றி விசாரித்தபோது திடீரென்று ஓட்டுநர் லாரியை ஓட்டிச சென்றார். துணைக் கண்காணிப்பாளர் திரு. பாலசுப்பிர மணியன் மற்றும் அவரது குழுவினர் ஜீப்பில் ஏறி அந்த லாரியைத் துரத்தினார்கள். துணைக் கண்காணிப்பாளர் மைக் மூலம் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டு சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த காவல் வாகன எண். 3-ன் ஓட்டுநருக்கு, தச்சநல்லூரிலிருந்து தாழையூத்தை நோக்கி வருமாறும் அங்கு தான் துரத்தி வரும் டி.என். 57/2761 என்ற லாரியை வழி மறித்து தடுத்து நிறுத்துமாறும் அறிவுரை வழங்கினார். அதன் படி காவல் வாகன எண். 3 அந்த லாரியை மடக்கிப் பிடிக்க வடக்குத் திசை நோக்கிச் சென்றது. அதிகாலை சுமார் 2.30 மணி அளவில் தனது லாரிக்கு முன்னும் பின்னும் காவல் துறை யினரது வாகனங்கள் வருவதைக் கண்டு மேற்படி லாரியின் ஓட்டு நர் தாழையூத்திலுள்ள இந்தியா சிமெண்ட் நிறுவனத்தின் கேட்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 மார்ச் 23

முன்பாக லாரியை திடீரென்று நிறுத்தினார். லாரி ஓட்டுநர் மற்றும் கிளீனர் உட்பட அனைத்து நபர்களும் லாரியிலிருந்து குதித்து இருட்டில் மறைந்தனர். துணைக் கண்காணிப்பாளர் திரு. பாலசுப்பிரமணியன், ஜீப் காவலர் 1340, திரு. பென்சன் ஆகியோர் லாரியைத் துரத்தி வந்தபோது திடீரென்று லாரியை நிறுத்தியதால் லாரியின் பின்புறம் மோதியது. தனது முகத்திலும் கழுத்திலும் கடுமையான காயம் அடைந்து துணைக் கண்காணிப்பாளர் திரு. பாலசுப்பிரமணியன் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தார். ஜீப் ஓட்டுநரான காவலர் திரு. பென்சன், இதர காவலர்கள் சாது சிதம்பரம், சண்முகராஜன், குமரேசன் மற்றும் குருசாமி ஆகியோர் காயம் அடைந்தனர். புற நோயாளியாக சிகிச்சைப் பெற்ற காவலர் குருசாமியைத் தவிர இதர காயமுற்ற காவலர்கள் பாளையங்கோட்டை டி.வி.எம்.சி. மருத்துவமனையில் உள் நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பாக தாழையூத்து காவல் நிலையத்தில் குற்ற எண் 130/93-ல் வழக்கு ஒன்று இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 279, 337, 338, 304ஏ ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. புலன் விசாரணை மேற்கொண்ட தாழையூத்து காவல் துறை ஆய்வாளர், திரு. பாலசுப்பிரமணியனின் பிரேதத்தை பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பினார். மேலும் அவர் மேற்படி லாரியிலிருந்து ஒவ்வொன்றிலும் 10 லிட்டர் சாராயம் கொண்ட 4 பிளாஸ்டிக் கேன்களைக் கைப்பற்றினார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளியும் ஓட்டுனருமான சாகுல் அமீது மற்றும் இதர நபர்களைப் பிடிக்க தனிப் படை ஒன்று அமைக்கப்பட்டது. தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் ரவி மற்றும் மோகன் என்பவர்கள் மேற்படி லாரியில் சாராயம் கடத்தியதற்காகக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது தனி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் 22—3—1993 அன்று தலா 300 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. துணைக் கண்காணிப்பாளரின் மரணம் தொடர்பாக வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. பிரேதப் பரிசோதனை முடிந்தப் பின்னர் 18—3—1993 அன்று மாலையில் இறந்தவரின் உடல் அவரது சொந்த ஊரான நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம் அம்மையப்பன் என்ற ஊருக்கு அம்பாசமுத்திரம் துணைக் கண்காணிப்பாளர் திரு. ஆஸ்ட்டின் அவர்களது பாதுகாப்பில் அனுப்பப்பட்டு 19—3—1993 அன்று சகல மரியாதைகளுடன் கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு. வால்ட்டர் தேவாரம் மற்றும் உயர் அதிகாரிகள் முன்னிலையில் அடக்கம் செய்யப்பட்டது. குடும்பப் பாதுகாப்பு நிதி 60 ஆயிரம் ரூபாய் உடனடியாக கருவூலத்திலிருந்து பெறப்பட்டு இறந்த துணைக் கண்காணிப்பாளரின் துணைவியாருக்கு 22—3—1993 அன்று அனுப்பப்பட்டது.

1993 மார்ச் 23] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

முற்பகல் 11.35

குடும்ப ஓய்வூதியம், கிராஜுவிட்டித் தொகை மற்றும் பணிபுரியும் போது இறந்தவரின் குடும்பத்தாருக்கு ஒரு இலட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்குவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னும் பல இடங்களிலே இது போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் ராமசுப்பு அவர்கள் பேசுகையில் கூறினார். பொதுப்படையாக இப்படிச் சொல்லக் கூடாது. எந்தெந்த இடத்தில் எந்தச் சம்பவங்கள் என்று இதுபோல் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முழு விளக்கமும் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அதுபற்றி நான் உங்களுக்கு அனுமதி அளிக்கவில்லை. (குறுக்கீடு).

டாக்டர் தே. குமாரதாஸ் : இறந்திருக்கிறார்கள் இரண்டு பேர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமாரதாஸ், நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை என்று சொன்ன பிறகு எப்படிக் கேட்க முடியும் ? (குறுக்கீடு) நேற்றே முறை தவறி நடந்து கொண்டீர்கள். (குறுக்கீடு) யாரோ இரண்டு பேர் இறந்து விட்டார்கள் என்று நீங்களாக எதையாவது எடுத்துக் கொண்டு எப்படிப் பேசலாம்? (குறுக்கீடு) முறைப்படி நீங்கள் அறிவிப்பு கொடுத்தீர்கள். (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : வெளியிலே தள்ளி விடுவீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமாரதாஸ், வெளியேற உத்தரவிடுகிறேன். அவையை விட்டு வெளியேற உத்தரவிடுகிறேன்.

(டாக்டர் தே. குமாரதாஸ் அவையை விட்டு வெளியேறினார்).

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த பிரச்சினையையும் முடித்துக் கொள்கிறேன். உட்காருங்கள்.